என்னுடைய 16 பஞ்சாயத்துக்களில் மீனவர்கள் இருக்கிறார்கள், ஆகவே மீனவர்களுடைய கஷ்டங்களை நான் உணர்ந்தவன் என்ற அடிப்படையில் தான் அதை நான் சொல்கிறேன். ஆகவே, கரியாப்பட்டினம் மீனவர்களையும் விரைந்து கண்டுபிடித்து அவர்களையும் காப்பாற்றவேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) ஆசிரியர்கள் போராட்டம் குறித்தும் மதுரையில் உண்ணாவிரதம் இருந்த ஆசிரியர் இறந்தது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆசிரியர்கள் பல கோரிக்கைகளை வற்புறுத்திப் போராடி வருவதாகவும் போராட்டத்தின் ஒரு கட்டமாக உண்ணாவிரதம் இருந்த வேளையில் மதுரையில் ஒரு ஆசிரியர் இறந்தது பற்றியும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. சி. ஞானசேகரன் திரு. பி. அரங்கநாதன், திருமதி ரமணி நல்லதம்பி. திரு. எம். தெய்வநாயகம், திரு சே. செல்வராஜ், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. கே. ஏ. மனோகரன், திரு. டெ, பொன்னுசாமி, திரு. எ, சம்பத், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. எஸ். டேனியல்ராஜ், திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் ஒரு பிரச்சினையை என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊரைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பெருமக்கள் அவர்களுடைய எதிர்காலத்தை எண்ணி பல கோரிக்கைகளை வலியுறுத்தி மதுரை மாநகரிலே பெரியார் பேருந்து நிலையம் முன்பாக உண்ணா நோன்பு மேற்கொண்டார்கள். அதிலே ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சுந்தரம் என்பவர் அங்கே உண்ணா நோன்பு இருந்து மயக்க நிலையை அடைந்தார். அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றவுடன் அவர் உயிர் பிரிந்து இருக்கிறது. அதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மறைந்த ஆரமபப் பள்ளி ஆசிரியர் தேனிக்கு பக்கத்தில் உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர். அவரை இழந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அத்தனை பேரும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் ஈடேறுவதற்கும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறுவதற்கும் அவரை இழந்து வாடும் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது பரிகாரம் காணவேண்டுமென்று உங்கள் வாயிலாக அரசை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

1993 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

முற்பகல் 11-35

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல மாதங்களாகவே ஆசிரியர்கள் ஒவ்வொரு பிரிவினரும் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்திலே ஈடுபட்டு வருவதும் அந்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவர்கள் வேலைக்குத் திரும்புகின்ற நிலைமைகளையும் நாம் பார்த்து வருகிறோம். இதற்கு முன்னாலே போராட்டத்திலே ஈடுபடாமல் இருந்த "ஆசிரியர்கள் இப்போது அதிகமான அளவுக்கு ஈடுபட்டு வருவதும் இந்த அரசு அவர்களுடைய பிரச்சினையை ஏதாவது தீர்க்கும் என்ற நம்பிக்கையின் காரணமாக இதைச் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைச் சார்ந்த பல்வேறு சங்கங்கள் இன்றையதினம் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கி இருக்கின்றார்கள். அதிலே, ஆண்டிப்பட்டி தாலுகா, நரச்சியார்புரம் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியர் ஆர். சென்ராஜன் என்பவர் சுந்தரம் அல்ல—ஆர். சென்ராஜன் என்பவர் இந்தச் சம்பவத்திலே மரணம் அடைந்த ஆசிரியரார்வார். 12—3-93அன்று அவர் அந்தப் போராட்டத்திலே கலந்து கொள்ள வந்த போது மதுரையிலே ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு தனியார் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். பிறகு 13—ஆம் தேதிதான் இந்தப் போராட்டம். ஆகவே கொஞ்சம் ஓரளவுக்கு நல்ல நிலையிலேயே இருப்பதாகக் கருதி அவர் 13-ஆம் தேதி போய் போராட்டத்திலே கலந்துகொண்டு இருக்கிறார். அங்கேயும் ஹார்ட் அட்டாக் வந்திருக்கிறது. இது மூன்றாவது நான்காவது தடவை என்று எனக்கு விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு அவர் ஆஸ்பத்திரியிலே மரணம் அடைந்து இருக்கிறார்கள். இது பரிதாபமான ஒன்றுதான். நம்முடைய அனுதாபத்திற்குரிய ஒன்றுதான் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மற்றபடி அவர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்த மட்டில் எல்லா ஆசிரியர்களும் கோரிக்கைகளை முன்வைக்கின்ற போது நாம் அனுதாபத்தோடு பரிசீலித்து முடிந்த அளவுக்குப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு இருக்கின்றோம். அந்த வகையிலே இவர்களுடைய பிரச்சினைகளையும் அரசு பரிசீலித்து வருகிறது. ஆகவே அந்தப் பிரச்சினைகளை அரசால் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை நிச்சயமாக தீர்க்கும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டத்திலே ஈடுபட்டு மரணம் அடைந்தவருடைய குடும்பத்திற்கு அரசு ஏதாவது உதவித் தொகை அளிக்க.......

TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 18

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசை எதிர்த்து போராட்டத்திலே ஈடுபடுகிறவர்களுக்கு நாம் உதவித் தொகை கொடுக்க ஆரம்பித்தால் அது தவறான முன்னுதாரணமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3 கவன ஈர்ப்பு.

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பேராவூரணி பணிமனையிலிருந்து இயக்கப்படும் நகரப் பேருந்துகள் பழுது பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து பேரவை விதி 55-இன் கீழ் கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி சோழன் போக்குவரத்துக் கழக பணிமனையிலிருந்து இயக்கப்படும் நகரப் பேருந்துகள் பழுது பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பேராவூரணி கிளையில் இரண்டு புறநகரப் பேருந்துகளும் 14 நகரப் பேருந்துகளும் இயங்கி வருகின்றன. பேராவூரணி கிளையில் இயங்கும் அனைத்து நகரப் பேருந்துகளும், பல்வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளாகும். பெரும்பான்மையான சாலைகள் பழுதடைந்த கிராமப் புற சாலைகளாகவே இருப்பதால் பேருந்துகள் அடிக்கடி பழுதடைந்து வருகின்றன. இருந்தபோதிலும் தினசரி பராமரிப்பு, வாராந்திர பராமரிப்பு, மாதாந்திர பராமரிப்பு, ஆறுமாத பராமரிப்பு, தகுதி சான்றிதழ் பராமரிப்பு போன்ற பணிகள் தவறாமல் செய்து பேருந்துகள் நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன.